# தோல் பதனிடுவோர் துயரம்

19006

மகா மதுரகவிஞர்
வி. வே. முருகேச பாகவதர்

மங்கள நிலையம்
அலெக்சாந்தர் கிராமம், சென்னை 12.

# தோல் பதனிடுவோர்

# துயரம்.

தமிழ் வளர்ச்சிக் கழகம்

பரிசுத்திட்டம்......................................

பகுதி......................................................

..............................................................

பதிவு தேதி.............................................

மகா மதுரகவிஞர்

**வி. வே. முருகேச பாகவதர்.**

**மங்கள நிலையம்**

அலெக்சாந்தர் கிராமம், சென்னை 12.

முதற்பதிப்பு மே 1951.
முழுஉரிமை ஆசிரியருக்கே

விலை அணா 4.

**கவிஞர்**
**இயற்றியவை.**

ஆதி திராவிடசமூக
சீர் திருத்தம்
அறிவானந்தம்.
சுயமரியாதை.
சமதர்மம்,
சன்மார்க்கம்,
ஞானரசம்.
மதுவிலக்கு,
சென்னை சிங்காரம்.
மாதருரிமை.
வெள்ளப்பாடல்
தமிழ்ச்சோலை
காந்திஅடிகள்

Printed at N. M. B. Press
25. Ramanuja Iyer Street Madras-21

# எங்கள் எண்ணம்.

தொழில்கள் பலவற்றுள் பழங்குடிகள் செய்வதும் மிகவும் பரிதாபகரமானதுமானதொழில்தோல்பதனி டும் தொழிலேயாகும். நாற்றத்தின் மத்தியில் நடைப் பிணங்களாகத் தொழில் செய்யும் அவர்களைக் காணும் மனிதஉள்ளம் படைத்த எவரும்கலங்காமல்-வேதனை படாமல் இருக்க முடியாது.

அப்படிப்பட்ட தொழிலாளத் தோழர்களின் பாடுகளைக்-குறைகளைக்-கண்ணீரைப் பலரும் அறியச் செய்ய வேண்டும் என்று எங்களுக்குப் பல நாளாக எண்ணந்தான்! என்றாலும், அதற்குச் சமயம் வர வேண்டாமா?

பழந்தமிழ் சமுதாயத்தின் ஒப்புயர் வற்ற முதல் கவிஞரும், இன்று பழங்குடிக்கே பாரதியாக விளங்கி வருபவருமான மகாமதுர கவிஞர். வீ. வே. முருகேச பாகவதர் அவர்களிடம் எங்கள் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினோம்.

எங்கள்எண்ணத்திற்கு இசைந்து தவிர்க்கமுடியாத சமூகப் பொது வேலைகளுக்கிடையே, மிகக் குறுகிய காலத்தில் இந்நூலைச் சிறப்புற ஆக்கித்தந்த மதுரக் கவிஞருக்கு எங்கள் இதயங்கனிந்த நன்றிஉரித்தாகுக!

தொழிலாளர்களின் பேராதரவு கவிஞருக்கு என்றுமிருக்கும் என்பதே எங்கள் நம்பிக்கை!

வாழ்க கவிஞர்!


P. V. நாகலிங்கம்
தோல்பதனிடும் தொழிற் சங்கத்தலைவர்

M. G. தேசிங்
துணைத் தலைவர்

M. K. அண்ணாமலை
செயலாளர்

M. G. அர்ச்சுனன்,
துணைச் செயலாளர்.

மாதவரம்,
சென்னை.



# தோல்.

உலகீர் எம்துயர் உரைப்பேன் கேளீர்!
அலகில் ஆடு மாடெனா நாங்கள்
துன்பம் மறந்து சுற்றம் சூழ
இன்பம் தவழ இருந்தோம், வளமாய் !
ஓதருங் காட்டில், உயரிய மலையில்,
ஆதர வாக ஆயிரக் கணக்கில்
புல்தழை மேய்ந்தோம்; புனலைக் குடித்து
நல் சுதந் தரமாய் நாங்கள் வாழ்ந்தோம்!
கூட்டமாய்ச் செல்வோம; குதூகலம் கொள்வோம்
மேட்டில் படுத்து மேன்மையாய்ச் சுகிப்போம் !
மாக்கள் எம்மை, மக்கள் நீவிர்
காக்கப் பிறந்தும் கடமை இழந்தீர் !
நாட்டுக் கொம்மை நயவஞ் சகமாய்க்
கூட்டி வந்தீர் ! குழந்தைகள் போலத்,
தொடர்ந்தே வந்தோம்! தொண்டுகள் செய்தோம்
உடம்பின் சத்தை ஊட்டினோம், பாலாய் !
உழுதோம் ஏரும்; உணவே அளிக்க !
அழுதோம் கலங்கி அதனை அறிவீரோ ?
ஏற்றம் இழுத்து நாற்றுக் கருநீர்
ஊற்றி அளித்தோம் உயிரை! வண்டி

இழுத்ததால் எங்கள் என்புகள் முறிந்தன.
கழுத்திலும் செந்நீர் கசிந்தது. இன்னும்
எத்தனை பாடுகள் பட்டோம்! எனினும்
அத்தனை நன்றியைக் கொன்றீர் அறிந்தும்!
உயிரைக் காக்க உயிரே வாழ்ந்த
உயரிய புத்தர் நயமொழி மறந்து—
"கொல்லான் ஊனைக் கோரான் தன்னை
எல்லா உயிரும் ஏத்தும்" என்றே
மனித உள்ளம் வாழுதற் குவந்த
புனித வள்ளுவன் பொன்னுரை தவிர்த்து—
'கொலை செய்யாதீர்' என்றே கூறி
நிலையாய் அன்பு நெறியை வளர்த்த
ஏசு நாதர் இரக்கம் துறந்து—
மாசில் கருணை வடிவின் வள்ளல்
ராம லிங்கர் தேமொழி மீறி—
கோமகன் முதலாய்க் குடியா னவனும்
புண்ணிய னெனவே போற்றிப் புகழும்
அண்ணல் காந்தி அகிம்சை இழந்து—
துடிக்கக் கொன்று தின்றீர் உடலை;
சுடுகா டாகச் செய்தீர் குடலை!
கார்கா லத்துக் கருமுகில் போல
போர் கோ லத்துச் செம்மையும் பூத்த
வெள்ளிய மேகம் விழுமிய நிறமாய்த்
துள்ளிய எங்கள் தோலை உரித்தீர்!
அது முதல் மாட்டை ஆட்டை நீக்கிப்
பொதுவாய்த் தோலெனப் புதுப்பெயர் தந்தீர்!

உரித்த தோலே ஒழித்தீர் இல்லே!
கருத்தாய் எம்மைக் கனகம் ஆக்கிட
வழித்தே எடுத்து வண்ணம் தீட்டும்
தொழிற் சாலேகளைத் தேடி அளித்தீர்
உரை போல் காணும் எம்முள் உப்பைச்
சரியாய் இட்டனர், தொழில் செய் தோழர்கள்!
உப்பிட் டானதும் உடன் எடை இட்டு
கப்பிடும் சுண்ணக் கலயந் தன்னில்
மிக்கக் கலக்கி விட்டனர்: மறுநாள்
அக்கரை யாக அனேத்தையும் மேலே
எடுத்துக் குழியில் இறங்கி மண் வெட்டிப்
பிடித்துக் கிளறிப் பெரிதும் குழப்பி,
மொத்தம் பிரித்துத் தோய்த்து விட்டனர்.
பத்து நா ளாகப் பதமுடன் ஊறிச்
சுத்தம் செய்தபின் சாய்வு மரத்தில்
வைத்தே அதன்மேல் வில்வளே கத்தி
கொண்டே மயிரைக் கூட்டிக் கழித்தனர்.
பண்டைத் தமிழர் பாரே ஆண்ட
மன்னர் வழிவழி வந்தவர்: அன்னோர்
தன்னடி வயிற்றில் தழும்பே ஏற
சாய்ந்து தலேயைத் தாழ்த்தி வழித்தனர்:
ஓய்ந்து போகும் உறுப்புக்கள் யாவும்
மழையில் நனேந்த உடம்பென வேர்வை
வழியும்! ஒடுங்கும், வயிறும் குடலும்!
வேகும் கைகால் விரல்கள்; குழியே
ஆகும்! செந்நீர் பொழியும் அந்தோ!

உருகிடும் உள்ளம்; உகுக்கும் கண்ணீர்
பெருகிடும் துக்கம்; பெரிதும் கண்கள்
காணக் கூசும் கோரக் காட்சி!
நாண அறிவு உலகம் நகைக்கும்.
நாற்றங் களுக்கு உச்சி! நாவால்
சாற்ற இயலாச் சகதி! என்றும்
பண்ணுல் உரையால் படித்தது அன்றிக்
கண்ணுல் நரகம் கண்டார் இல்லை,
இதுவே நரகம் எனலாம்! நேரில்
பொதுவாய்க் காணப் பொருந்தும் உண்மை.
புழுக்கள் நெளியும் பெரிய பள்ளம்
அழுக்கின் ஊற்று அதனையும் மிஞ்சும்!
பகுத்தறி வுள்ள மனிதன் பாரீர்!
சகிக்கொணு நாற்றம் சகிக்கிருன்! பாவம்!
கண்ணெளி கூசிடக் கருத்துடன் மேலுள
சுண்ணம் நீக்கி வண்ணக் குழியில்
புதிய தண்ணீர் புதுச்சுண் ணும்பில்
பதிய நான்கு நாள் பக்குவம் செய்து
குழியைக் கலக்கிக் குழப்பி விட்டுப் பின்
வழியாய் மீண்டும் வெளியே எடுத்தனர்.
எடுத்த எங்கள் அடிப்பா கத்தை
நெடுங் கூர் கத்தி நிமிர்த்திச் சீவி
மேற்பாக மெலாம் வெண்மையாய்த் திகழ
பாற் போ லாக்கிப் பாங்குற நீரில்
இட்டனர், மீண்டும் எடுத்து நெரித்து
விட்டனர்! மேலே விரித்தனர்; விரித்து

அளவாய்த் திரவம் அதனுள் கலந்து
வளமாய்க் காலால் வாங்கி மிதித்தனர்!
நெஞ்சம் சூழுற சேர்ந்த பாடுகள்
பஞ்சும் பட்டு இருக்குமோ புகல்வீர்!
கனிவாய் வெளுக்கக் கண்டபின் மேலும்
தனி ஆ வாரம் பட்டைகள் தங்கும்
தொட்டியில் மூன்று தினங்கள் தூங்கிட
கட்டாய் அமிழ்த்தி விட்டுத் துவைத்தனர்
சுருக்கம் தவிர்த்திட சூழ்ந்துள மயிரைக்
கருக்குள கத்தியால் பொருத்தமாய்ச் சீவிக்
கண்டே மேலும் கலைத்துப் பிரித்துக்
கொண்டே விட்டனர் மீண்டும் அக் குழியில்!
நித்தமும் சிறுவர் நீரில் இறங்கி
மெத்தப் பதமுற மாற்றி விடுவர்!
ஆறுநாள் கழித்து அனைத்தையும் எடுத்து
வேறுவே றுகப் பிரித்து விரித்தனர்,
மார்பெலாம் வலிக்க அழுத்தி வழித்தே
ஆர்வமாய் மென்மை ஆக்கிப், பட்டையை,
அழுக்கு நீரை நீக்கி, ஆங்கே
இழுக்கில் புது நீர் பட்டையும் இட்டு
வேறு தொட்டியில் திருப்பி விட்டு
ஊற வைத்தனர்; ஒழுங்காய் நசுக்கினர்
திரும்ப எட்டுத் தினங்கள் கழித்து
விரும்பி எடுத்தனர் வெளியே! மீண்டும்
ஈரத் துணி யென இறுக்கிப் பிழிந்தனர்
சீராய் உதறித் திருத்தினர்! அசுத்தம்

போக்கிச் சுத்தமாய்ப் புதுமெரு கீந்திட
தேக்கும் கடுக்காய் தொட்டியில் விடுத்து
இருதினம் ஊறிய பின்னர் எடுத்து
மருந் தெனும் உப்பைப் பொருந்தக் கலக்கி
சின்னதும் பெரிதெனச் சீராய்ப் பிரித்தனர்.
தன்னேர் நல்ல எண்ணெயைத் தடவினர்,
நன்கு மேலுயர்த்தி நவ எழில் தோன்ற
பொன்னிறப் பட்டுப் பூந்துகில் போன்று
வண்ணம் தந்து மழமழப் பாக்கினர்,
கண்ணுடி மேசையில் கவிழ்த் திரு புறமும்
வெளுத்த உடையைத் தேய்க்கும் விதமாய்
ஒளிரத் தேய்த்து உயர்மெரு களித்து
வீசியே உலர விடுத்தனர்; மறுநாள்
மாசெலாம் போக்கி வகுத் தெடை இட்டு
திமிரே நீக்கி மிருதுவாய்த் துலங்க
"எமிரி" என்னும் எந்திரம் தன்னில்
அழுத்தி எடுத்தனர். புயலது அடித்தால்
புழுதி எழுதல் போலத் தூள்கள்
கிளம்பும் மூச்சுத் திணறும்; கேட்டை
விளம்பக் கூடுமோ? வெந்த மனத்தால்
ஏழை மகனென் செய்வான் பேதை!
பாழும் உடலே வளர்க்கப் பாவம்
புலி போல் வீரம் பூத்த தோழர்
நலி கின்றுரே நலமே இழந்து,
கள்ளமில் மரபின் கனவழி வந்த
தெள்ளிய பண்டைத் தமிழர் தானே

வழித்தார் அழகுற வாரி ! ஓரம்
கழித்தார் ! பின்னர் கட்டுக் கட் டாக
வண்டியில் ஏற்றிக் கொண்டு பெரிய
மண்டியில் சேர்த்தனர், விற்பனைக்காக !
வேதனைக் கண்ணீர் செந்நீர் வேர்வை
போதவும் சிந்திப் பொருமித் தோழர்கள்
இன்னுயிர் துடிக்க வழித்து எடுத்துப்
பன்னரும் பொன்னெனச் செய்ததன் பயனால்
முதலாளிகள் பலர் முளைத்தனர் ! பணத்தில்
நிதமும் புரள்வர் நேராய் அங்கே
தேனை மொய்க்கும் ஈக்களாய்த் தேடி
தானே மொய்ப்பர் தனிகர்கள் பல்லோர்
முன்னே பிரிப்பர் வகை வகையாக !
கன்னலாய் மதித்துக் காசெலாம் கொட்டி
கப்பலி லேற்றி அனுப்புவர் கருத்தாய்
செப்பரும் கொள்ளை லாபம் திரட்ட !
விலைக்கு விற்பர் மேனா டெங்கணும்
பல பல லட்சம் குவிப்பர் பணத்தை!
சுக ஆதாரம் துளியும் இன்றி
அகமே நொந்து அருநோய்க் காளாய்
ஓழிகின் றார்கள் தொழிலாளர் பலர்.
கழியும் மயிரும், அழுக்கும் பணமாய்
உருவே ஆக்கி ஊருக் கழுது
திருவே மாறித் தேய்ந்தார், பலரைத்
தம் முழைப் பாலே தனிமா ளிகையில்
செம்மை வாழ்வில் சிறக்கச் செய்தவர்

ஓட்டைக் குடிலில் உள்ளம் உடைய
நாட்டில் உழல் ஒருர் நாயினுங் கீழாய்
முதுமை வாழ்வு முடியும் மட்டும்
இதுவே தொழிலில் இருந்தும், பிறர் போல்
உபகார மெனும் ஊதியம் இல்லை,
அபராதம் என் செய்தனர் அவர்கள் ?
மண்ணில் வெளிச்சம் மற்ற வர்க் களித்து
தண்ணீ ரெனவே தன்னுடல் உருகி
ஒழிந்திடும் மெழுகு வர்த்தியாய் உழைத்து
அழிவதை நிதம் நிதம் அறியீரோ பூவில்
கருணை ஓர் கிழங்கினில் கண்டபின் பேணும்நற்
கருணை யை எளியர் பால் கருதிடார் மனிதரா ?
உதவாப் பொருளுக் குயிர் அளித் தவர் யார் ?
பதமாய்ச் செய்தவள் பாட்டாளி அன்றோ !
அத்தகு தோழர்கள் அவதி யுறுவதோ ?
சித்தங் குழைதல் சிறப்போ ? பிறர்போல்
அன்னவர் வாழ்வு இன்னல்கள் இன்றி
நன்னிலை அடைய நாளும் உழைப்பீர் !

# தொழிலாளி.

காலுக்குச் செருப் பேது? கச்சை யேது?
கைக் கழகு பை யேது? துருத்தி யேது?
மேலுக்கு மோட்டார்க்கு மெத்தையேது?
மிக்கான யந்திரத்தை இயங்கச் செய்யும்
ஆலைக்குள் பட்டைகள் தான் ஏது? கையில்
அழகான சவுக் கேது? நீர் இறைக்கும்
சாலுக்குக் கீழ்த் தொங்கும் துதிக்கை யேது?
தனித்த முகப் படாம், சேணம் குதிரைக்கேது?

போர்வீரன் தோளுறையும் துப்பாக் கிக்குள்
பெருந்துணையாய் இடுப்பினிலே இருந்து தூங்கும்
கூர்வாளுக் குறை ஏது? முரசு ஏது?
கொட்டுகிற மத்தளங்கள் ஏது? நல்ல
பேர்மிக்க மேனாட்டுத் தொப்பிக்குள்ளே
பெருமிதமாய்க் காட்சிதரும் தோல்களேது?
ஆர் கண்டார் தொழிலாளர் அன்றோ நன்கு
அழகு பெற மெருகேற்றி மென்மை யாக்கி,

அளிக்கின்றோம்—எம் உழைப்பைக் கவர்ந்து அந்தோ!
ஆயிரமாயிரமாக முதலாளர் தாம்
குளிக்கின்றார் இன்பத்தில் மேலும் மேலும்
குவிக்கின்றார் மலை போன்று கொள்ளை லாபம்!
புளிக்கின்ற கூழன்றிப் புழுதி யன்றிப்
பூவுலகில் வாழ்வினி லென்ன கண்டோம்?
ஒளிப்பின்றிக் கேட்கின்றோம் உழைப்புக் கேற்ற
ஊதியமே அளித்திட்டால் அழிந்தா போவீர்!

சுண்ணும்பு குழம்பினிலே கால்கை வேக
துர்நாற்றம் தனில் மூழ்கி மயிரைப் போக்கிக்
கண்ணுடி போல் தோலை வெளுத்தோம்! எங்கள்
கைநகங்கள் கால் நகங்கள் கருவண்டாகப்
பிண்ணுக்குப் போல் வெடிக்கும் பாதம் ரெண்டும்!
பெரிதுமெங்கள் உடம்பிலுள மயிர்க்காலெல்லாம்
கண்ணுகி நீர்வடிக்கும் இந்தக் காட்சி
கவிஞர்களும் இயம்பவொணு சோகச் சித்ரம்!

கந்தலுடை துளி எண்ணெய் காணுச் சென்னி
கவலையினை எடுத்துமிழும் கண்ணுர் பண்டைப்
பைந்தமிழிற் கலைவாணி அவ்வையார் தம்
பரம்பரையில் வந்துதித்த பெண்கள் பல்லோர்
செந்தணலாய் எரிகின்ற வெயிலில் நின்று
சிவப்பு வெள்ளை கறுப்பு தனி கலப்பு மாக
இந்த வணம் கழித்தமயிர் பிரித்து நீரில்
இட்டலசி உலர வைத்து மலர்க் கரங்கள்

கொப்பளிக்கச் சிந்தாமல் சேர்த்து ஒன்ருய்க்
கோணிகளில் திணித்த வற்றை யிழுத்துக் கட்டி
இப்படியாய் வண்டியிலே எற்றி வைப்பர்
இடை யொடிய திருமேனி துவள! ஆங்கே
கப்புகிற தூசு புகை கண்ணில் மூக்கில்
கனிவாயில் புகும் கேட்டை யாரே கண்டார்!
செப்பரிய உள் நாடு வெளி நாட்டுக்கும்
சென்று வண்ணக் கம்பளியாய் மயிர்கள் மாறும்!

மேதினியில் பல்லாண்டாய் உழைத் துழைத்து
வெந்த தெங்கள் நல்லுடம்பும் மனமும்! வாங்கும்
ஊதியமோ சிறுகுன்று; உழைப்போ மேரு!
உருகிவிடும் எம்குறையைக் கேட்க உள்ளம்!
பாதி யுயிர் பிரிந்த நடைப் பிணங்க ளானோம்
பழங்குடியின் வள்ளுவனார் மரபில் வந்தோர்!
நாதியற்றோம்! பட்டினியாய் இனியும் வாழோம்
நாடறிய இதை எடுத்து முழக்கம் செய்வோம்!

# உரிமை வேட்கை.

சிம்மேந்திர மத்திமம். ஆதி

உடம்பிலே நாற்றம் ஏனோ தனபாலா—உன்றன்
உடையிலே பொத்தல் ஏனோ தனபாலா
சுடர்முடி தரித்தொரு நாள் தனபாலா—இந்தத்
தொல்புவியை ஆண்டவன் நீ தனபாலா.

தோல்பதனிட்டதாலே குணசீலா—மிக்க
துர்நாற்றம் வீசுதடா குணசீலா
கால்வயிறு கஞ்சியில்லை குணசீலா—இதில்
கட்டதுணி எங்கிருக்கும் குணசீலா

கால்கை நகங்கள் எல்லாம் தனபாலா—காணக்
கருவண்டாய்ப் போனதேனோ தனபாலா
பால் போல் தோலை வெளுக்க குணசீலா—ஆவாரம்
பட்டையாலே கெட்டதடா குணசீலா.

அடிவயிற்றில் இடுப்பில் தனபாலா—தழும்பே
ஆனது ஏதுக்கடா தனபாலா ?
வெடித்த தேன் காலும் கையும் தனபாலா ?—பார்க்க
வேதனை யாகுதடா தனபாலா

வயிற்றை மரத்தில் தாங்கி குணசீலா—தோலை
வழித்ததால் தழும்பாச்சு குணசீலா
மயிரில் படிந்த சுண்ணம் குணசீலா—பட்டு
வெடித்தது காலும் கையும் குணசீலா.

தோலும் நரம்புமாகத் தனபாலா—நாறும்
தோலை வெளுத் தென்ன கண்டாய்த் தனபாலா
ஆலை முதலாளிக்கே குணசீலா—லட்சம்
அள்ளிக் கொடுத்தே னடா குணசீலா.

கண்ணின் ஒளி இழந்து தனபாலா—கூனிக்
கையில் தடியே ஊன்றித் தனபாலா
மண்ணில் முதுமையிலே தனபாலா—நன்றி
மானியம் உனக்குண்டோ தனபாலா?

மதிக்கு நான் மெச்சுகின்றேன் குணசீலா—உன்னை
வாயார வாழ்த்துகிறேன் குணசீலா
இதற்கு நமது சர்க்கார் குணசீலா—இனி
ஏற்ற வழி காட்ட வேண்டும் குணசீலா

பல்வகை செருப்புக்கான தனபாலா—தோலைப்
பதனிட்டுப் பிறர்க் களித்தாய் தனபாலா
கல்லில் முள்ளில் வெயிலில் தனபாலா—வெறும்
காலில் நடக்கின்றாயேன் தனபாலா.

சாற்றைப்பிழிந்து கொண்டார் குணசீலா—உதவாச்
சக்கையை எமக்கீந்தார் குணசீலா
கூற்றை ஒழித்தெமக்கு குணசீலா—உழைப்பில்
கொடுத்திடல் வேண்டும் பங்கு குணசீலா

பேரில் மட்டும் சிறந்தாய் நீ தனபாலா—பணப்
பெட்டியில்லை துட்டும் இல்லை தனபாலா
ஊருக்குழைத்தாயடா தனபாலா—உழைத்து
ஓட்டாண்டி யானாயடா தனபாலா.

பொன்ன னெனப்பேர் இருக்கும் குணசீலா—தூளீ
பொன்னுடம்பில் கண்டறியான் குணசீலா
அன்னவன் நிலை போலக் குணசீலா—வாழ்வில்
அமைந்தது பேரெனக்குக் குணசீலா.

வெண்ணெய் அவர்க் களித்ததேன் தனபாலா—புளித்த
வெறுங்கஞ்சி குடித்ததேன் தனபாலா
கண்ணீரை அன்றி வாழ்வில் தனபாலா—நித்தம்
களிப்பு நீ காணுததேன் தனபாலா.

உழைக்காதார் உண்ணுகின்றார் குணசீலா—கூடி
உழைப்பவர் துடிக்கின்றோம் குணசீலா
உழைப்போர்க் குழைப்பை நல்க குணசீலா—கோரும்
உரிமை ஒன்றுலே வாழ்வோம் குணசீலா.

# உள்ளக் குமுறல்!

கமாசு. ஆதி.

எடுத்துரைக்க வருத்தம்—அகத்தே
கொதிக்கும் அந்தோ! இரத்தம்—மொத்தம்

அடுத்து மனிதன் செயும் தொழில்புவி மேலே
ஆயிரம் ஆயிரம் கண்டோம் கண்ணாலே
தொடுத்துத் தோல் பதனிடும் தொழிலிது போலே
துன்பதொழில் வேறொன்றில்லை என்றால் மிகையாகாதே

தாங்கொணா பெருநாற்றம் தேங்கும் நீர்பக்கம்
சரிந்து வலைபோல் பொத்தல் குடிசையும் இருக்கும்
ஈங்குநாய் பன்றி கூளி கழுகொடு காக்கை
என்றென்றும் சூழ்ந்திருக்கும் இவன் துயர் வாழ்க்கை

வளைந்து வளைந்து தோல் வழித்தான் மனம் நோக
வளைந்ததுவே முதுகு பெரிதும் வில்லாக
இளைத்ததுவே உடம்பும்: சீப்புப்பல் போலே
எடுத்துக் காட்டுமே பக்க 'விலாஎன்புமேலே

ஏணியாக இருந்து ஏற்றியே வைத்தான்
எல்லோரையும் உயர்ந்த இன்பபுரி சேர்த்தான்
காணச் சகிக்காத் துன்ப புரியின் கீழிருந்து
கலங்குவான் நிதநிதம் கண்ணீர் நனிசொரிந்து

வேண்டிய உணவு உடை வீடு இல்லாது
வியன்தரு கல்வி நலவேட்கை தீராது
தூண்டில் மீன் போலே துடிக்கின்றான் பேதை
தோல் பதனிடுகின்ற தொழிலாளி இவன் கதை

மற்றவர் வாழ்தல் போன்று இவன் தனி வாழ்வும்
மறுமலர்ச்சியே காணப் பறந்திடும் தாழ்வும்
உற்ற இவன் வாழ்வே உலகவாழ் வென்று
உண்மை உணர்ந்தால் சமதன்மம் கமழும் நன்று

# காந்தி அடிகள்

— கவிதை நூல்! —

மகா மதுரகவி

வி. வே. முருகேச பாகவதர்

சென்னை அகில இந்திய வானொலியில் நிகழ்ந்த கவி அரங்கின் போது மகாமதுர கவிஞர் அவர்கள் அரங்கேற்றிய சுவை பொழுகும் செந்தமிழ்க் கவிதை!

எளிய இனிய நடை பொலிவுற விளங்கும் இந் நூலில் காந்தி அடிகளின் வாழ்கை வரலாறு சுருக்கமாக எனினும் விளக்கமாக எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது.

அமைச்சர் கனம் M. பக்தவச்சலம் அவர்களால் பாராட்டப்பெற்றது.

சொல் ஆழமும், பொருள் நயமும், உயர்ந்த உவமையும் நிறைந்தது.

சரளமான நடை.

வெளிவந்துவிட்டது!

விலை] **மங்கள நிலையம்** [அணா 4.

அலெக்சாந்தர் கிராமம், : : சென்னை-12,